Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939,

உ

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28ம் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத். ௬௩] யாழ்ப்பாணம்:- கர௵ ஆனி௴ ௮உ வெள்ளிக்கிழமை (22 ஜூன் 1951) [இல. ௨௨]

## திருக்கோணமலைத் தலச் சிறப்பு

திருச்சிற்றம்பலம்

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி அலம்பும் நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும் அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும் கோணமா மலையமர்ந் தாரே.

— சம்பந்த சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

பாடல்பெற்ற ஈழநாட்டுத் தலங்கள், திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் எனனும் இரண்டுமாம். திருக்கோணமலை என்பது ஆசிரியர் ம. க. வேற்பிள்ளைப் புலவர் இயற்றிய சந்திரமௌலீசர் சதகத்தில், திருக்கோணமலை எனப் போற்றப்பட்டிருக்கிறது. அந்நூலிற் கூறிய படி அதன் வரலாறு:—

தக்ஷிண கைலாசமாகிய திரிகோணாசலமானது ஆதிசேடனுடன் பகைத்த வாயுதேவனால் பெயர்த்தெறியப்பட்ட கைலாசகிரி சிகரங்கள் மூன்றனுள் ஒன்று. (மேருவின் சிகரங்கள் மூன்று என்பது வேறு) திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் பதிகம் பெற்றது. மநுநீதிச் சோழனது சந்ததியாயுள்ள குளக்கோட்டு மகாராசாவினால் நிருமிக்கப்பட்ட கோயிலைத் தன்னிடமாகக்கொண்டுள்ளது.

இம்மலையும் பீடமும் முக்கோணமாயிருத்தலால் இப்பெயர் பெற்றதாம். இதன் வரலாறு முழுவதும் அச்சதக நூலிற் கண்டு கொள்க.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தென்னாட்டில் அமணசமுத்தைச் செங்கண்மால் வழிபட்ட சேதுவின்கண் சிவபெருமானைப் பணிந்து பதிகம்பாடி, அங்கிருந்து ஆழிபுடைசூழ்ந்தோங்கும் ஈழநாட்டுக்கு அடியாருடன் செல்வதற் கியலாதெனபதை எண்ணி அத்திசை நோக்கித் திருக்கோணமலையைப் போற்றிப் பதிகம் பாடியருளினார். இதனால் அக்காலத்திலே தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும நெருங்கிய தொடர்பு உண்டு என்று தெரியவருகிறது.

சுவாமி திருநாமம்: கோணேசுவரர். தேவி திருநாமம்: மாதுமையாள், பிடியன்ன மென்னடையாள்.

இருப்பிடம்: இலங்கைத் தீவில் யாழ்ப்பாணத்திற்குத் தென்கிழக்கில் உள்ளது.

— ஆதீனவெளியீடு
தருமபுர எண் 244

L.K.S LEBBAY BROS
GOLD HOUSE



தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதர்ஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

உ

## தோத்திரம்

மனவூசலில் உழல்வேனையும் மதுராபுரி ஈசன்
நனவூடொரு பொருளாயிரு நயனங்களும் நின்றான்
கனவூடும்என் நினைவூடு கலந்தானெனில் இதன்மேல்
இனவூதிய முளதோகொடு வினைசூழ்வது மிலையே.

மனமான ஊஞ்சல்போல நிலைபெறாத் திரிய உழல்கின்ற தமியேனையும், மதுரையிற் கோயில்கொண்ட சொக்கலிங்கப்பெருமான் கனவின்கண்ணே ஒரு பொருளாகத் திருவுளத்துக்கொண்டு என்கண்களுக்குப் புலப்பட்டார்; சொப்பனவத்தையிலும் அடியேனது நியானத்தில் அகப்பட்டாரென்றால், இதனைக்காட்டிலும் அதிகமான (சிறந்த) பேறுண்டோ (இல்லையென்றபடி) (இங்ஙனமானால்) தீவினைகளும் இனிமேற் சிறியேனைப் பற்றிக்கமாட்டா என்பது பொருள்.

ஊசல் - ஊஞ்சல்; நயனம் - கண்; இனவூதியம் - கூட்டமான பேறு, அதிகபேறு. இன்னவூதியம் இனவூதியமென்றாயிற்றெனினுமாம், இன்ன ஊதியம் - இப்படிப்பட்டபேறு [84.]

## "பெண்பிள்ளைக்கு மாப்பிள்ளையே சீதனம் கொடுக்க வேண்டும்"

[பிரதி வித்தியா மந்திரியாகிய திரு. K. கனகரத்தினம், சென்ற வாரம் பண்டத்தரிப்பு பெண்கள் கலாசாலையில் நிகழ்ந்த பரிசளிப்புக் கூட்டத்திலே தலைமைவகித்தபோது, செய்த பிரசங்கத்தின் சாரம்.]



"முற்காலத்திலே எங்களுக்கிருந்த கட்டுப்பாடு காரணமாக, பெண் பிள்ளைகள் பக்குவப் பருவமடைந்தபின் அவர்களைப் பெற்றோர் பள்ளிக்கூடத்திற் போய் படித்து வருதற்கு விட்டிலர். அது ஒரு அளவிற்கு இந்தியாவிலுள்ள பெண்களுட் சிலர் முட்டாக்கிட்டுக்கொண்டு திரிவதை ஒத்திருந்தது. அத்தக்காலத்திலே குமர்ப்பிள்ளைகள் எங்கும் போகாமல் தத்தம் வீட்டிலேயே கட்டுப்பாட்டோடிருந்தமையினால் பெற்றோர்கள் தங்கள் பெண்பிள்ளைகளுக்குத் தாங்களே கலியாணமும் பேசி ஒழுங்குசெய்து நிலம் புலங்களையோ, வீடுவாசல்களையோ, ஆபரணங்களையோ, ஒருதொகைப் பணத்தையோ, வரனுக்குச் சீதனமாக அப்பெண்ணின் பொருட்டுக் கொடுக்கவேண்டியிருந்தது. அக்காலத்திலே பெண்கள் தாங்களாக ஏதும் உத்தியோகம் பார்த்து, இல்லையேல் வேறு ஏதும் தொழிலைச் செய்து, பொருளீட்டிக்கொள்ள வகையறியாதாராய், பொருளின் பொருட்டு தங்கள் கணவன் கையையே எதிர்பார்க்க வேண்டிய நிலையிலிருந்தார்கள். ஆனால் அக்காலத்துச் சீதனம வழங்கும் முறை ஒரு அளவிற்குச் சரியானதென்று சொல்லலாம். மேலும், அக்காலத்தில், வரன் தான் தாலி கட்டிய பின்பே பெண்ணை நேரிற் பார்க்க முடியும்.

ஆனால், 50 ஆண்டுகளுக்கிடையில், இங்குள்ள மக்கள் வாழ்க்கையில் பல மாறுதல்கள் ஏற்படலாயின. இங்குள்ள சிறுமிகள், சிறு பிராயத்தில்மாத்திரமல்லாமல் கன்னிகைகளான பின்னும், கலாசாலைகளிலும், கல்லூரிகளிலும் சென்று, சென்று ஆங்கிலம, தமிழ் முதலியவற்றை உயர் வகுப்புகள் வரையில் கற்றுத் தேறி வருகின்றார்கள். ஆண்பிள்ளைகள் பிரவேசிக்கும் பரீட்சைகளில், பெண்பிள்ளைகளும் எவ்வகையான வித்தியாசமுமின்றி, பிரவேசித்துச் சித்தியடையலாம். உயர்ந்த உபாத்தியைத் தொழில் முதலாகிய தொழில்களையும் உத்தியோகங்களையும். ஆண்களைப் போலப் பெண்களும இக்காலத்திற் பார்க்கலாகும்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## சூரிய கரும்புள்ளிகளும் உலக நிகழ்ச்சிகளும்

## The Sun Spots And World Events

(பிரித்தானிய வானசாஸ்திர அங்கத்தவராகிய மட்டுவில் பிரமஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயர்)

I

அதிகாலையிற் சூரியனை நாம் பார்க்கும்போது அவன் செந்நிற வடிவாகக் காணப்படுகிறான். பின்னர் வானத்தில் உயர உயர மஞ்சள் நிறமாகவும், உச்சியைக் கடந்து செல்லும்பொழுது வெண்ணிறமாகவும் தோற்றப்படுகிறான். இதுவன்றி உதிக்கும்பொழுதும், அஸ்தமிக்கும் பொழுதும், பெரிதாகவும், மற்றைய காலங்களிற் சிறிதாகவும் காட்சியளிக்கிறான். இக்காட்சியைக் கம்பர்,

"எழுமிடத் தகன்றிடை
யொன்றி யெற்படு
பொழுதிடைப் போதலிற்
புரிசைப் பொன்மதில்
அழன்மணி திருத்திய
அயோத்தி யாருடை
நிழலெனப் பொலியுமால்
நேமி வான்சுடர்"

என நகரப்படலத்தில் வர்ணித்திருக்கின்றார்.

சூரியனைக் காலையிலும் மாலையிலும் பார்க்கலாமேயன்றி ஏனைய காலங்களிற் பார்ப்போமாயின் கண்கள் கூசுவதுமன்றிக் கெட்டுப்போகும். இக் காரணத்தினாற்றான் சூரிய ஆராய்ச்சி செய்பவர்கள் கறுப்புக் கண்ணாடி யமைக்கப்பட்ட மூடியையுடைய தூரநோக்கியைக்கொண்டு சூரிய ஆராய்ச்சி செய்கிறார்கள.

இத்தகைய தூரநோக்கியைக் கொண்டு பார்க்குமிடத்துச் சூரியனின் மத்தியபாகமாகிய ஒளிகோளத்தின் (Photo Sphere) சில பாகங்களில் கரும்புள்ளிகள் தோற்றுவதைக் காணலாம். இக் கரும்புள்ளிகளைக் கலிலியோ (Galilio) என்னும் இத்தாலிய (Italy) தேசத்து வானசாஸ்திரி தாம் இயற்றிய தூரதரிசனியைக்கொண்டு 300 வருடங்கட்கு முன் கண்டறிந்தார். இவருக்கு முன் சீனர்களும தமது ஊனக்கண்ணாலேயே 2500 வருடங்கட்கு முன் இதை பார்த்திருந்ததாகத் தெரிகிறது. மிகப்பெரும் புள்ளிகள் வெற்றுக்கண்ணுக்கே புலனாகும்.

நமது தேசத்தவர்களும இதனை முன்னரே அறிந்திருந்தார்களென்பதை, 'வெஞ்சுடர் மண்டிலத்தின்

தொடர்ச்சி 4-ம் பக்கம்.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். கர ஹூ ஆனி ௮ ௨ வெள்ளிக்கிழமை

## சீதன விவகாரம்

சீதன விஷயமாக, பிரதி வித்தியா மந்திரியாகிய திரு. K. கனகரத்தினம் பண்டத்தரிப்புப் பெண்கள் வித்தியாசாலை வருடாந்த பரிசளிப்பின் போது கண்டித்துக் கூறிய பேச்சு இற்றைப்பிரசுரத்திற் பிறிதோரிடத்து வெளிவருகின்றது; திரு. கனகரத்தினம் இச் சீதனவிவகாரத்தை நுட்பமாக ஆராய்ந்து போதிய அநுபவத்தோடு எடுத்துப்பேசியுள்ளாரென்பது அவர் அவ்விஷயமாக அச்சமயத்திற் கூறியகூற்றால் நன்கு அயிர்க்கக் கிடக்கிறது.

பெண்களுக்கு ஆண்களோடொத்த சம உரிமையுண்டு, ஆற்றலுண்டு, உத்தியோகம் பார்க்குந் திறமையுண்டு நுண்ணறிவுண்டு, வாக்குரிமையுமுண்டு என்று இக்காலத்திலே ஆடவர்களும் சொல்லிக்கொள்ளுகிறார்கள்; மகளிர் மன்றத்தாரும் வாதிக்கிறார்கள்; அரசினரும் இவற்றை ஏற்றுக் கருமமாற்றுகிறார்கள்; "இல்லாளகத்திருக்க இல்லாததொன்றில்லை, இல்லாளில்லாத இல்லஞ் சுடுகாடொக்கும், இல்லாளையில்லாதான இம்மை மறுமைப் பேறு எவையுமில்லாதவனே"னென்று தமிழ் நூல்களிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது; இல்லாளில்லான் எவ்வகையான மங்கல கருமத்திற்கு முதவான் என்று எங்கள் சமய நூல்களும் விதிக்கின்றன. மேலும் இக்காலத்திலே பெண்பாலாராயுள்ளார் கல்வி கற்றல் முதலிய சகல கருமங்களிலும், உலகத்திலே ஊடாடும் விஷயத்திலும், எந்தப்பருவத்தேனும், ஆடவரையொப்ப ஊடாடத் தலைப்பட்டுக்கொண்டனர். பழைய முறையைக் கைக்கொண்டுகட்டுப்பாட்டோடு ஒழுகுங் கன்னியரும், இல்லறத்திற் புகுந்த மகளிரும் இன்னுமிருக்கிறார்கள்; ஆனால் அவர்கள் சிலரினுஞ் சிலரெனலாம்.

இப்படியெல்லாம் ஆடவரோடு பெண்கள் சமத்துவம் வகித்திருந்தாலும், ஆடவரையொப்பப் பெண்கள் கல்விகற்றிருந்தாலும், அரசியற் சுதந்திரங்கள் உத்தியோகங்களைப் பெற்றிருந்தாலும், ஒரு கன்னிகைக்கு ஒரு வாலிபனைக் கல்யாணம் பேசத் தலையிடும்போது, பெண் பெண்தான், ஆண் ஆண்தான் என்ற ஞாயம் பிறக்கின்றது. மணம் பேசப்படுங் கன்னிகை, அந்த வாலிபனோடு ஒத்த கல்வியறிவுள்ளவளானலும், ஒத்த பரீட்சையிற் சித்தியடைந்தவளானலும், ஒத்த வேதனம் பெற்று உத்தியோகம் பார்ப்பவளாயிருந்தாலும், இல்லை, இப்பதவிகளிலே மேற்பட்டவளாயிருந்தாலும், இவற்றோடு பேரழகு பெண்மைக்குரிய நலன்களெல்லாம் வாய்க்கப்பெற்ற கன்னிகையாயிருந்தாலும், கல்யாணம் பேசப்போனால், மாப்பிள்ளை இல்லையேல் அந்த மாப்பிள்ளை பகுதியார் "சீதனம் எவ்வளவு கொடுப்பீர்கள்? அதிலும் பணமாக எவ்வளவு கொடுப்பீர்கள்?" என்று கேட்கத் தலைப்பட்டுவிடுகிறார்களே! இது என்ன விபரீதம்? ஆண்பிள்ளை "பீ ஏ." பெண்பிள்ளை பி. ஏ. யிடஞ் சீதனங் கேட்கின்றதே? இதுதானா கல்வியாலும் நாகரிகத்தாலும் அடைந்த சுதந்திரநிலை? "இப்படியெல்லாம் அதிகமாகக்கேட்கவொண்ணாது, இந்தப்பெண்ணை நாங்களும் பெரும்பணஞ் செலவிட்டு உயர்தரக் கல்வி பயிற்றுவித்துப் பட்டம்பெறச்செய்து உத்தியோகம் பார்க்கத் தக்கதாகவும் வைத்திருக்கிறோம், அப்படியெல்லாமிருக்க இப்படியெல்லாம் நீங்கள் கேட்பது சரியல்லவே" என்று கன்னிகையின் பெற்றோர் உற்றார் எதுஞ் ஞாயஞ் சொன்னால், மாப்பிள்ளையின் பெற்றோர்உற்றார் என்ன சமாதானஞ் சொல்லுகிறார்கள்? "உங்களுக்குக் காரியம் விளங்கவில்லை, எங்கள் மாப்பிள்ளைக்கு நூறிடத்திலே கல்யாணம் பேசி வந்ததுண்டு; இன்றும் வருகிறார்கள்; ஒரு பகுதியார் தம் பெண்ணுக்குப் பதினாயிரம் ரூபா பணமும், போதியவைர நகையும், கொழும்பிலே ஒருசொந்த வீடும், பழையிலே ஒரு பெரிய தென்னந் தோட்டமும், இருவருங் குடியிருந்து வாழ ஒரு புதிய பெரிய கல்வீட்டோடு கூடிய வளவும் சீதனமாகத் தருவதாக வாக்குப்பண்ணுகிறார்கள்; இவைமாத்திரமல்லாமல் இந்தச் சம்பந்தம் நிறைவேறினால், மாப்பிள்ளைக்குப் பன்னீராயிரம் ரூபாவிற்குக் குறையாத புதிய "கார்" (மோட்டார்ரதமும், வாங்கிக்கொடுப்பதாகப் பெண்ணின் தகப்பனார் உறுதியாகச் சொல்லுகிறார்கள்; நாங்கள் அவற்றையெல்லாம்விட்டு உங்களிடம் பெண்பேசி வந்தது உங்கள் குடி குலம் ஒழுக்கம் என்னுமிவைகளை யுத்தேசித்துத்தான்; "சீதனத்தை இப்படிக் குறைத்தால் இந்தச் சம்பந்தஞ் சந்திக்காது" என்று சொல்லிக் கல்யாணத்திற்கு இசையாது போய்விடுகிறார்கள்; சீதனத்திற்கு ஆசைப்பட்டுச் சாதிவிட்டுச் சமயம் விட்டுச் சம்பந்தஞ் செய்து சில காலம் வாழ்ந்து பின் பிணக்குற்றுப் பிரிந்த குடும்பங்கள் இந்த நாட்டிலே, இந்தக்காலத்திலே எத்தனை! எத்தனை!! காதலனுக்கும் காதலிக்குமிடையே அபிப்பிராய பேதமுண்டாகிப் பிணக்கு முற்றிச் சண்டை மூண்டு கல்யாணப் பதிவு நீக்கப்பட்டுத் தனித் தனி நிராச் சஞ்சலத்தோடும் வசைமொழியோடுங் காலம்போக்கும் ஆடவர்தொகை மகளிர் தொகை எவ்வளவு! தம் மரபிற்குரிய பெண், சகல நலன்களும் வாய்ந்த கன்னிகை எதிர்பார்த்தவண்ணமிருக்க, நம்பியிருக்க, சீதனமில்லையென்ற காரணம்பற்றி அந்தப் பெண்ணைப் புறக்கணித்து, தமக்கொவ்வாத வேற்றுக் குடும்பத்திலே பெருந்தொகைச் சீதனத்தோடு பெண்கொண்டு சில காலம் ஒற்றுமையாக விருந்து, சீதனச் செருக்காற் காதலி காதலனை மதியாதொழிய, அவன் அதனால் மனமுடைந்து, தனக்கடங்காப் பெண்ணென்று கண்டு விட்டுப் பிரிந்து சாகுமட்டுஞ் சஞ்சலமுறும் ஆடவர்களெத்தனைபேரைக் காணலாம்! இந்த அனர்த்தங்களெல்லாம் பெண்ணின் பெருந் தன்மையைப் பொருட்படுத்தாது சீதனத்திற் காசைப்பட்டுக் கல்யாணஞ் செய்யப் போனமையினால் வந்த கேடல்லவா? தொகுத்துச் சொல்லுகில் இந்த நாட்டிலே போலிச் சீர்திருத்தங் கூடக் கூடச் சீதனங் கேட்டலும் அதிகப்படுகிறதென்றே சொல்ல வேண்டும்.

இந்தச் சீதனங்கேட்டலாகிய பெருங் கேட்டினை, அருவருப்பான செயலை ஒழித்தற்கு எங்கள் பிரதி கல்வி மந்திரி குறித்த கூட்டத்திலே யுள்ள பெண்களுக்கு ஒரு உபாயஞ் சொன்னார்; உபாயமென்ன? சீதனங் கேட்டல், வாங்குதலாகிய தூர் வழக்கத்தை இனிமேலாயினும் ஒழித்து விடுதற்கு ஆகவேண்டிய முயற்சி செய்தற்கான ஒரு கன்னியர் Girls) சங்கத்தைக் கூட்டி நடத்த வேண்டுமென்று சொல்லுகிறார் பிரதி கல்வி மந்திரி; அவர் நல்லநோக்கத்தோடுதான் அந்த உபாயத்தைச் சொல்லுகிறாரென்பது எல்லார்க்கும் விளங்குகின்றது; ஆனால் உபாயம் வாய்க்கவில்லை யென்றே நாம் சொல்லவேண்டியிருக்கிறது; ஏன்?

ஐயனார் கோவிலில் அடுத்த ஆண்டு உற்சவ முடிவிற் பலியிடப்படும் ஆடு கோழிகளெல்லாம் ஒருங்கு சேர்ந்து, ஒரு மகாநாடு கூட்டி "எங்களை இனிமேற் பலியிட வொண்ணாது" என்று நிர்ணயஞ் செய்து, தங்களை வளர்ப்போர்க்கு வெட்டிப் பலியிட இருப்போர்க்கு, அந்த நிர்ணயத்தை ஏகமனதாகநிறைவேற்றி யனுப்பினால், அவ்வாடு கோழிகள் தப்பிக்கொள்ள முடியுமா? முடியாதே! அவைகளைப் பலியிட விருக்கும் மாந்தர் அப்படிச் செய்வது அடாதென் றுணர்ந்தாற்றான், பலிவெட்டுதல் இல்லாதொழிய ஆடு கோழிகளும் உயிர் தப்புதல் முடியும்; அதேபோல, சீதனங் கேட்கும் வாலிபர் ஒரு கூட்டங் கூட்டி "நாங்கள் சீதனம் வாங்குவதில்லை" யென்று நிச்சயித்துக் கருமமாற்றினால் ஒருஅளவிற்கு இந்தச் சீதனம் கேட்டு வாங்கும் வழக்கந் தேயும்; இதனால், மனப்பூர்வமாகத் தங்கள் பெண்ணுக்குப் பெற்றார் கொடுக்குஞ் சீதனத்தை வாங்க வொட்டாது வாலிபரைத் தடுக்க நாம் வரவில்லையென்பதை இரு பகுதியாரும் விளங்கிக்கொள்ளவேண்டும்.

## மணிக்கோபுரத்தில் ஏறிய ஒருத்தி

மட்டக்களப்பைச்சேர்ந்த பெரிய கல்லாறென்னுமிடத்தில் வசிக்கும் சின்னப்பிள்ளையென்னும் 28 வயதுவரைகொண்ட ஒரு பெண், அங்குள்ள கோயில் முகப்பில் நிற்கும் 45 அடி உயரமுள்ள கண்டாமணிக் கோபுரத்தில் ஏறியிருந்துகொண்டு, பலர் கேட்கவும் இறங்க மறுத்துவிட்டாளாம்; ஒரு மனுஷன் அவளை இறங்கச் செய்யும்படி கோபுரத்தில் ஏற முயன்றபோது, அவள் தான் அதில் ஏறும்போதே பொறுக்கிக் கொண்டுபோன கற்களிலொன்றால் எறிய, மனுஷன் பயந்து மெல்ல இறங்கிவிட்டானாம், உடனே அத்தப்பெண்ணின நிலைமைக் கல்முனைப் பொலிசாருக்குத் தெரிவிக்கப்படவே அவர்களிற் சிலர் அவ்விடத்துக்கு வந்து அவளை இறங்கச்செய்தற்குத் தங்களாலான உபாயமெல்லாஞ் செய்துபார்த்தார்களாம்; ஆனால் அவள் இறங்க மறுத்துவிட்டாள்; கடைசியாக பொலிஸ் சார்ஜன் பஸ்தியாம்பிள்ளையென்பவர், அந்தப் பெண் இறங்கி வந்தால் தாம் அவளைக் கலியாணஞ் செய்துகொள்வதாக வாக்குப்பண்ணினார்; உடனே சின்னப்பிள்ளை கீழே இறங்கிவந்தாள்; பஸ்தியாம்பிள்ளை அவளைக்கொண்டு போய் மட்டக்களப்பு டிஸ்திறிக் நீதிபதியிடம்விட அவர் அவளுக்குப் பைத்தியமோ என்பதைத்தெரிவிக்கும்படி சோதனை செய்யும் வைத்தியசாலைக்கு அனுப்பினாராம்.

## சைவப் பிரசங்கம்

சென்ற புதன்கிழமை (20-6-51) கைதடி வடக்கு இந்துகலாபிவிருத்திச் சங்கத்தாரின் முயற்சியால், வைற்சிட்டிக் கந்தசுவாமி கோயிற் பூங்காவனத் திருவிழாவை யுத்தேசித்து மேற்படி கோயிற் சந்நிதானத்தில், பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை "சமய நூற் கல்வி" என்னும் விஷயமாகவும், ஸ்ரீ இராமநாதன் கல்லூரி ஆசிரியையாகிய பண்டிதை ச. அபிராம்பிகை B.A. திலகவதியார், பாண்டி தேவியார், என்னும் விஷயங்கள் பற்றியும் பிரசங்கஞ் செய்தனர். ஆண்களும் பெண்களுமாகிய பல அன்பர்கள் அச் சமயத்திற் பிரசங்கங் கேட்டு மகிழ்ந்தனர். —கடித.

## சங்காபிஷேகமும் உற்சவமும்

வண் - மேற்கு சாட்டுத்துறைப் பகவதி மாரியம்மை கோயிலில், வருகிற செவ்வாய்க் கிழமை (26-6-51) பகல் சங்காபிஷேகமும், அன்றிரவு விசேஷ உற்சவமும் நடைபெறும்.

# ரேடியோ

## ❋ இசைத்தட்டு

**திருச்சி சனி ஜூன் 23**

காலை 7 10 தோரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கே என் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 8 ஆங்கிலத்திற்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள்கேட்டவை* 1 30 ஆங்கிலத்திற்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 வாத்யகோஷ்டி* 2 தமிழில்செய்தி 2 10 சித்ரகானம் * 2 45 முடிவு.

மாலை 5 30 ஸிதார் வயலின் ஆ. இ கே. வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்திற்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 ரேடியோவாத்யகோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 த்வாரம் வெங்கடசாமிநாயுடு வயலின் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கவிச்சொல்கேளீர் 9 30 கோவிந்ராவ் தந்தாலே ஒலிப்பதிவு 10 முடிவு.

**திருச்சி ஞாயிறு ஜூன் 24**

காலை 7 10 தோரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சுவை ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்திற்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 எம் ஏ வேணுகோபால் பாட்டு 12 45 பண்டிட் ரவிசங்கர் ஸிதார்* 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 எம் எல் வசந்தகுமாரி* 2 தமிழில் செய்தி 2 10 சித்ரகானம்* 2 30 செண்டு இசை நிகழ்ச்சி 3 முடிவு.

மாலை 5 30 வி எஸ் கோமதி சங்கரய்யர் வீணை 5 45 உறையூர் பி எஸ் சாவித்திரி பாட்டு 6 ஆங்கிலத்திற்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 30கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 ரேடியோ அறிமுகம் 8 ஏழுஜன்மக் காதல் நாடகம் 8 30 எம் ஏ வேணுகோபால் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 வி எஸ் கோமதி சங்கரய்யர் வீணை 10 முடிவு.

**திருச்சி திங்கள் ஜூன் 25**

காலை 7 10 தோரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 திருவிசநல்லூர் ஆர் சுப்பிரமணியம் பாட்டு 8 ஆங்கிலத்திற்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள் கேட்டவை* 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 சவித்ரா சங்கீத்* 2 தமிழில்செய்தி 2 10 வி வேணுகோபால் கிளாரினெட் 2 45 முடிவு.

மாலை 5 30 திருவிழிமிழலை என் சுப்ரமணிய பிள்ளை வயலின் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்திற்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 திருச்சி வாத்யகோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 ரூபகா ஏ வி நாகராஜ சர்மா —பேச்சு 8 திருவிழிமிழலை என சுப்ரமணியபிள்ளை வயலின் 8 30 குரல்வகை* 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 திருவிசநல்லூர் ஆர் சுப்ரமணியம் பாட்டு 10 முடிவு.

**திருச்சி செவ்வாய் ஜூன் 26**

காலை 7 10 தோரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கே லலிதா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

1 குரல்வகை* 1 15 பெண்ணுலகம் 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 வாத்ய இசை 2 தமிழில்செய்தி 2 10 எம் எஸ் முத்து கிருஷ்ணன் பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 மாரியம்மன் கோவில் பி டி ராமசாமி பிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 கே லலிதா பாட்டு 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 ஜி என் பாலசுப்ரமணியம் பாட்டு ஆர் எஸ் கோபாலகிருஷ்ணன் வயலின் என் வி என் நாராயணன் மிருதங்கம் திருவில்வாமலை எஸ் வில்வாத்ரி ஐயர் கடம் 9 ஆங்கிலத்திற்செய்தி 9 15 மாரியம்மன் கோவில் பி டி ராமசாமி பிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு.

## இலங்கைவாசிகளல்லாதார் கதி

இலங்கை வாசிகளெனப் பதிவு பெறாத அகதிகளுக்கு இப்போது அரசாங்கம் கொடுத்துவரும் பண உதவி நிறுத்தப்பட வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ்வகதிகளின் விஷயம் அவரவர்களின் தேசப் பிரதிநிதிகளுக்கு (High Commissioners) அறிவிக்கப்படுமாம். தாம் பெற்றுவந்த உதவியை இழந்து இடருறும் அகதிகள் யார் யாரென பிரிவு அதிகார உத்தியோகத்தர் (District Reveaue Officer) சமூக சேவைத் தலைமை உத்தியோகத்தருக்கு அறிவிக்கவேண்டுமெனவும், அவர் சமூக சேவை மந்திரிக்கு அவ்வறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் மந்திரி தெரிவித்திருக்கின்றார். மந்திரி அவ்வகதிகளின் விஷயத்தை அவ்வத்தேசப் பிரதிநிதிக்கு அறிவிப்பர். பிரதிநிதிகள் தத்தம் தேச அகதிகளுக்கு வேண்டிய பண உதவியைப் பெற்றுக் கொடுத்தற்காகிய ஒழுங்குகளைச் செய்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## காங்கேசன்துறைமுகத்தில் அரிசியிறக்குமதி

சென்ற சனிக்கிழமை தொடக்கம் மூன்று நான்குநாட்களாக மேற்படி துறைமுகத்தில், 15000 மூடையரிசி இறக்குமதி செய்யப்பட்டதாம்; K. ரவானஸ் என்னும் கப்பல், கொழும்பில் இவ்வரிசியை இறக்குமதிசெய்யும்படி கொண்டு வந்ததென்றும், கொழும்பிலுள்ள அதிகாரிகள் இக்கப்பலைக் காங்கேசன்றுறையிற்சென்று இறக்குமதி செய்யக்கட்டளையிட்டார்களென்றுஞ்சொல்லப்படுகிறது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் வடர்காவற்றுறை கரம்பன் குடி சந்தியாப்பிள்ளை எவலிசோர் பிள்ளை கைம்பெண் எலிசபெத்.

வழக்காளி

இல. 7452 எதிர்

வடர்காவற்றுறை நாரந்தனை வயித்தியாம்பிள்ளை பிலிப்புப்பிள்ளை எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 7452 - ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியையும் 1951 - ம் ஆண்டு ஆடி மாசம் 14-ம் உ சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 860-00-ம் ரூபாய் 600/-க்கு 17-1-51 தொடக்கம் 19-3-51 வரைக்கும் 100/க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100/க்கு 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 175/17 சதம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வடர்காவற்றுறைக் கோவிற்பற்று நாரந்தனை இறை "பாலைமாகாடு" பா. கி. இலா. 45 - இதிற் தென் பக்கமாய் முன் சிதனம் கொடுபட்ட பா. கி. இலா. 30 பிறநீக்கலாக மிகுதி வடபாகத்தில் பா. கி. இலா. 15 - ம் பனைகளும் வேம்புகளும் எல்லை கிழக்கு அவுரும்பிள்ளை பெண் ஞானம்மாவின் ஆதனம் வடக்கும் மேற்கும் ஒழுங்கை தெற்கு V. M. சவிரிமுத்து பெண் ஹூர்த்தம்மாவின் ஆதனம் - சொல்லப்பட்ட ஹூர்த்தம் மாவித்துரிய தெறகெல்லைக்காணியிலிருக்கும் வடக்குக்கிணற்றிற் தண்ணீர்ப் பாகமும் வழி வாய்க்கால் பாவிப்புருத்து முழுவதும்.

1951-ம் ஆ ஆனிமீ 12-ம் திகதி.

வை. எம்பமூர்த்தி
கொம்மிஷனர்.

M 38 22-6-51.

## நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (24-6-51—30-6-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இவ்வாரத்தில் எடுத்த கருமங்கள் சித்தியாகும்; குடும்ப மகிழ்ச்சியுமுண்டு; ஆனல் வருவாய்க்கு மேற்பட்ட செலவு நேரும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசிரிடம் 1, 2-ம் பாதம்

சம்பந்த வழியாரால் சில சங்கடம் விளையக்கூடும்; தொழில் உத்தியோக விஷயங்களில் அனுகூலமான நிலைமை; புதிய திட்டங்களும் நிறைவேறும்; எவரோடும் பிணக்க வேண்டாம்; எதனையும் தீர்க்கமாக ஆலோசித்துச் செய்க.

**மிதுனராசி** மிருகசிரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

முந்திய நிலைமையைக் காட்டிலும் நன்மையான நிலைமை; பொருளளவிலும் விருத்தியுண்டு; ஆனல் மன ஆறுதல் இல்லை. அற்ப சுகவீனமும் நேரக்கூடும்.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

கிழமையின் முதலிரு தினங்களிலும் சாவதானமாக நடவாடுக; சுகவீனம், மனக்கிலேசம், பொருள் நஷ்டம் நேர இடமுண்டு; புதிய முயற்சிகளில் பொருளைச் செலவிடவேண்டாம்; எஞ்சிய தினங்களில் நன்மையுண்டு.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

வாரத்தில் முதலிரு நாட்களிலும் பொருள் வரவுண்டு; திங்கள் தொடக்கம் புதன்கிழமை முடியுமவரை நிதானமாக நடவாடுக. ஏனைய தினங்கள் நன்மையானவை. சித்தி யடையவேண்டுமானுல் அதிக முயற்சிசெய்க.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

எதும் புதுமுயற்சி செய்யில் இக்கிழமையின் முற்பகுதியில் தொடங்குக; பிற்பகுதி நன்மையான காலமல்ல; குடும்பப் பிணக்கு மனச்சஞ்சலம் நேரக்கூடும்; கிழமையின் கடைசி நாளிற் சாவதானமாக நடவாடுக.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

இவ்வாரத்தில் அதிக பழிமொழியும் குறையுங்கேட்கநேரிடும்; குடும்பப்பிணக்குமுண்டு; ஒருங்கு கடமைபார்ப்பவரோடு பிணக்கவேண்டியும் நேரும்.

**விருச்சகராசி** விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

இவ்வாரத்தில் முன்யோசனையின்றிச் சண்டையிட்டுவிட்டுப் பின்பு பச்சாத்தாபப்படவேண்டிநேரும்; மேலுத்தியோகத்தர்களோடு மாறுபட வரும்; தேகசுகத்தைப் பேணுக. பழிச்சொல்லுக்கு இடங்கொடுக்க வேண்டாம்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

இவ்வாரத்தில் அவதானமாகவே நடந்துகொள்ள வேண்டும்; எவ்வகையான கருமத்திலும் பொறுப்பெடுக்க வேண்டாம்; புருஷன் மனைவியர்க்கிடையில் பரஸ்பரம் பிணங்கவேண்டி நேரும்.

**மகராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

இவ்வாரத்தில் வரவுக்கு மேற்பட்ட செலவுண்டாம்; குடும்பப் பிணக்கும் நேரும்; ஒரு பெண் காரணமாகப் பழிச்சொற் கேட்க நேரும்; எதும் அபாயம் வராமற் காத்துக்கொள்க.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2-ம் 3-ம் பாதம்

முயற்சி விஷயத்திலும் பண விஷயத்திலும் அனுகூலமான வாரம்; ஆனல் எதும் சுகவீனம் நேரக்கூடும்; குடும்பப் பிணக்குக்குமிடமுண்டு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இந்த வாரத்தில் எதும் பிழையான கருமத்திலே தலையிட நேரும்; செய்ய வேண்டிய கடமைகளைக் கிரமமாகச் செய்க; குடும்ப விஷயத்திலும் சங்கடங்கள் நேர இடமுண்டு.


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எசசந்த சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாய்ப்புமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
பிரூப்பர்.

Std. 14 20-11-46—20-11-49

## சூரிய கரும்புள்ளிகளும் உலக நிகழ்ச்சிகளும்

1-ம் பக்கத் தொடர்ச்சி

கண் துளை தோன்றுதல் நியமித்தம்' என்ற நச்சினார்க்கினியர் கூறியதிலிருந்து நாம் அறியத்தக்கதாக இருக்கிறது.

சூரியனின் ஒளிகோளமானது அதிக உஷ்ணமடைந்த வாயு செறிந்திருக்கும் வலயமாகும். இப் புள்ளிகள் சூரிய பிம்பத்தின் உட்பாகத்திலுள்ள அபரிமிதமான உஷ்ணத்தால் உண்டாக்கப்பட்ட, வாயுக்கள் (Gasous) மிகவேகமாக வெளியே வரும்பொழுது ஒளிகோளத்தில் உண்டாக்கப்படும் கிண்ணம்போன்ற துவாரங்களாகும். இப்புள்ளிகளின் உற்பத்தியைப்பற்றி வானசாஸ்திரிகள் இன்னும் ஓர் முடிவிற்கு வரவில்லை. இப்புள்ளிகளிற் சில சிறியனவாகவும், சில 1,000,000 (பத்து லட்சம்) மைல் விட்டமுடையனவாகவும் காணப்படுகின்றன. சில புள்ளிகள் மாதக்கணக்காகத் தோற்றிக்கொண்டிருக்கும். சிறிய புள்ளிகள் ஒன்று அல்லது இரண்டு நாட்களில் மறைந்துவிடும். 1840-ம் வருடம் தோற்றிய புள்ளிகள் 18 மாதங்களாகத் தெரிந்தன. 1892-ம் ஆண்டு காணப்பட்ட ஒரு புள்ளி 75000 மைல் அகலமும் 150,000 மைல் நீளமும் உடையதாகும், இதைவிட இன்னும் அநேக புள்ளிகள் அவ் வருடத்திற்றோன்றின. 1896-ல் சில பெரிய புள்ளிகள் சூரியனது மேற்பரப்பு முழுவதையும் மூடிச் சென்றன. 1905-ம் வருடம் காணப்பட்ட ஓர் புள்ளியினது துவாரத்தில் நாம வசிக்கும் பூமியைப்போல் 20 பூமிகளைப் பக்கம் பக்கமாக வைத்தாலும் அப் பூமிகள் கரும்புள்ளியின் மறைப்பை முட்டாவலிருக்கும். இவைகளைச் சாதாரணமாகக் கரும்புள்ளிகளென்று வழங்கினாலும் அவை கருமையுடையனவல்ல அவை கறுப்பாகத் தோன்றுதல் சுற்றொளி காரணமேயாகும். அவையும் ஒளியுடையனவாகும். இப்புள்ளிகள் சில வருடங்களில் அதிகமாகவும் சில வருடங்களிற் குறைவாகவுந் தோற்றுகின்றன. இவ்விதமான தோற்றங்கட்கு ஓர் காலவரையறை உண்டோவென்பதை அறியும்பொருட்டு ஸ்குவாபி (Schwabe) என்னும் ஜேர்மனிய தேசத்து இரசாயன சாஸ்திரி (Alchimist) நெடுங்கால ஆராய்ச்சி செய்தார். 1852-ம் வருடத்தில் இப்புள்ளிகள் பதினொரு வருடங்கட்கு ஒரு முறையே அதிகமாகத் தோன்றுகின்றனவென்பதை நன்கு தீர்மானித்தார், இவர் துவிடாமுயற்சிக்கும் ஊக்கத்திற்குமாக இராஜாங்க வானசாஸ்திர சங்கத்தாரால் (Royal Astronomical Society) தங்கப்பதக்கம் பரிசாகக் கொடுக்கப்பட்டது.

இப்புள்ளிகளின் எண்ணிக்கையும் பரப்பும் 11 வருஷம் 4 மாதங்கட்கொருமுறை நபகரித்துப்பின் குறைகின்றன.. 1901, 1913, 1923, 1944-ல் மிகக்குறைவாகவும், 1905, 1917, 1928, 1939-ல் இப்புள்ளிகள் மிக அதிகமாகவுங் காணப்பட்டன.

இப்புள்ளிகள் சூரியனின் கிரட்சரேகையில் அல்லது துருவங்களில் தோற்றுவது மிக அரிதாகும். மத்தியபாகத்திற் காணப்படுவதில்லை. வடபாகத்தில் ஐந்தாவது அக்ஷரேகையிலிருந்து 40 வது அக்ஷரேகை வரையிலும் தென்பாகத்தில் 5 வது அக்ஷரேகையிலிருந்து 40 வது அக்ஷரேகைவரையிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. இப்புள்ளிகளை நாம தினமும் அவதானிப்போமாகில் அவைகள் நாளுக்கு நாளாகச் சூரிய பிம்பத்தின் ஓரத்தை நோக்கிச் செல்வதாகத்தோற்றும். இவ்வாறுகத் தோற்றுவதற்குக் காரணம சூரியன் தனது நாராசத்திற் (Axis) சுழலுவதேயாம்.

இப்புள்ளிகளை ஆராய்வதால் சூரியன் தன்னைத்தானே சுற்றிக்கொள்ளுகிறதென்பதை நாம் அறியத்தக்கதாயிற்று. சூரியன் மத்திய பாகத்தில் தன்னைத்தானே சுற்றுவதற்கு ஏறக்குறைய 25 நாட்கள் செல்கின்றன என்பதை இதைக்கொண்டே அறிந்தார்கள். சூரியனின் மத்திய பாகத்திலுள்ள புள்ளிகள் 25 நாட்களிற் சுற்றி முன்னிருந்த இடத்திற்கு வருகின்றன. துருவ மண்டலத்திலுள்ள புள்ளிகள் சுற்றிவர 28 நாட்கள் செல்கின்றன. சூரியனின் வடமுனையும் தென்முனையும் இவ்வாறு சுற்றுவதற்கு 34 நாட்களாகின்றன. மேலும் திருமங்கை மன்னர்,

"காரார் புரவியேழ் பூண்ட
தனியாழி
தேரார் நிறைகதிரோன்
மண்டலத்தைக் கீண்டுபுக்கு
ஆரா அமுதம் அங்கெய்தி
அதினின்றும்
வாரா தொழுவதொன் றுண்டே"

என்ற சிறிய திருமடலிலும்,

"மன்னுங் கடுங்கதிரோன்
மண்டலத்தின் நன்னடுவுள்
அன்னதோ ரில்லியி
னூடுபோய் வீடென்னும்
தொன்னெறிக்கண் சென்றாரைச்
சொல்லுமின்கள்"

என்ற பெரிய திருமடலிலும் கூறியிருப்பதை நோக்குமிடத்து இச் சூரிய புள்ளிகள் சூரியனின் மத்திய பாகத்திலுள்ளன வென்பது தெளிவாகிறது. கரும்புள்ளிகள் இடது பக்கத்திலிருந்து வலது பக்கமாக நகர்வதால் சூரியன் அப்பிரதக்ஷிணமாகத் தன்னைத்தானே சுற்றுகிறதென்பது தெரியவருகிறது.

## "பெண்பிள்ளைக்கு மாப்பிள்ளையே சீதனம் கொடுக்கவேண்டும்"

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஆனதால், முற் காலத்திலே, கல்வியறிவில்லாத கன்னிகையின் பொருட்டு வழங்கப்பட்டு வந்ததான சீதனத்தை, இக்காலத்துப் படித்த கன்னிகையர் பொருட்டும் உழைத்து உத்தியோகம் பார்க்கின்ற பெண்கள் பொருட்டும், வழங்கப்படவேண்டுமெனவும், தாங்கள் வழங்கவேண்டுமெனவும், வாலிபர் நினைப்பதும், ஆசைப்படுவதும பெருந்தவறாகும். இக்காலத்திலே ஒரு வரன் தனக்கேற்ற ஒரு கன்னிகையை நேரில் கண்டு, அவள் குணம், பண்பு, முதலியவற்றை ஒரு அளவுக்கறிந்து தனக்கு விருப்பமானால், அவளை மணஞ் செய்துகொள்ளக்கூடிய வழிவகைகளுமுண்டு.

இப்படியெல்லாமிருக்கவும், இக்காலத்திலே படித்த வாலிபர், உத்தியோகம் பார்க்கும் வாலிபர், தங்களுக்குப் பெருந் தொகைச் சீதனம் வேண்டுமெனவும், அதையும் பணமாகவே திரட்டித்தரவேண்டுமெனவும் வற்புறுத்தி நிற்றல் அவர்களுக்கே அவமானம் தருவதாகும். மேலும், சீதனத்திற்கு மாத்திரம் ஆசைப்பட்டு நிறைவேறிய சில சம்பந்தங்கள், காலகதியில தம்பதிகளுக்கிடையே பிணக்கோடு கூடியனவாகவும், சஞ்சலத்திற் குரியனவாகவும், முடிவதை நாம் காணலாம். இப்பொழுதுள்ள படித்த பெண்களால் அவர்களைக் கலியாணஞ்செய்யும் ஆடவனுக்கு பல நன்மை உண்டாகுமாதலால், அப்படிப்பட்ட பெண்களுக்கு மாப்பிள்ளையே சீதனம் கொடுப்பது முறையாகுமென நான் நினைக்கின்றேன்.'

சபையார்

=ஏழாம் பாலபாடம்=

இப்பாலபாடம் இப்பொழுது அவதாரிகை பரீட்சைக்கு வினக்கள் இலக்கண விளக்கம் வினக்களென்னுமிவைகள் அநுபந்தமாகச் சேர்த்து வெளியிடப் படலாயிற்று.

விலை சதம் 90

மனேஜர்.

### சரவணை தெங்கங்குளம் மீனாட்சியம்மை கோவில்

நேற்றைத்தினம் (21-6-51) ஷை கோவிலில், பகல் விசேட அபிஷேகமும் இரவு சைவப்பிரசங்கமும உற்சவமும் நடைபெற்றன. பிரமஸ்ரீ வ மு. இரத்தினேசுவர ஐயர் "சிவசக்தி" என்னும் பொருள்பற்றியும், ஸ்ரீ பொ. அப்புக்குட்டி "ஆலய வழிபாடு" என்னும் பொருள்பற்றியும் பிரசங்கஞ் செய்தார்கள்.

— கடித

## பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம்
உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன்
விலை ரூபா 2-00

பிரதோஷவிரத மான்மியம் (புதிய பதிப்பு)
சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரதகாலத்திற் சுவாமி கும்பிட வேண்டிய ஒழுக்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது;
விலை சதம் 40

வில்லி பாரதம்-புட்ப யாத்திரைச் சருக்கம்
பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள் விளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரூ. 1—25ச.

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம்
மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது.
விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்
மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாகவிதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக் கதை I. (கோபால நேசரத்தினம்)
ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப் படிக்கத் தெவிட்டாதது.
விலை ரூ. 1—25 ச.

சைவ சமயசாரம்:
ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்று யுள்ளது. விலை சதம் 45

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்)
சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கில மறிந்தோர் எவரும் படிக்கத் தக்கது. முந்தி வெளிவராதது.
விலை 60 சதம் (அணு 10)

முற்பண மனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்
Apply: to
PANDIT V. T. SAMBANDHAN
Vannarponnai, Jaffna.

வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

# திறமான தேக்கமரங்கள்

பல திணிசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

74 ஆஸ்பத்திரி ரோட்

Std 2 யாழ்ப்பாணம்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press. Vannarponnai, Jaffna, on Friday June 22, 1951